நாள்= 24.02.2022

Probate OP. 1/2019

ம.சா.1 திரு. தேவராஜன் த/பெ. இராமானுஜ முதலியார்

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**=

மனு சொத்து எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான். அது எதிர்மனுதாரர் மடத்திற்கு சொந்தமானது. எனது மூத்த அண்ணன் பஞ்சாட்சரம் என்பவரை இந்த வழக்கில் ஒரு மனுதாரராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவர் இறந்துவிட்டார். எனது மற்றொரு சகோதரர் வெங்கடேசன் என்பவரும் இறந்துவிட்டார். முதல் மனுதாரர் அரசாங்க வேலையில் இருந்தார். பின்னர் பணி ஓய்வு பெற்றுவிட்டார். எனது அப்பாவுக்கு 2 மனைவிகள் என்று சொல்வது சரியல்ல. எனது அம்மா மட்டும் தான் அவரது மனைவி. எனது அப்பாவுக்கு எனது அம்மா உயிருடன் இருந்தபோதே வேறு ஒரு பெண்ணுடன் உறவு இருந்தது என்று சொல்வது சரியல்ல. மனு சொத்தில் வீடு இருக்கிறதா என்றால் வீடு இருக்கிறது. அது ஏற்கெனவே இருந்த வீடு என்று சாட்சி பின்னர் தாமாக தெரிவித்தார். அந்த வீட்டை எனது தகப்பனார் கட்டினார். தாவா சொத்து இருக்கும் இடம் செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் வரும் சாலையில் இருக்கிறது என்றால் சரிதான். பட்டாள தெரு என்பது வேறு பகுதி என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு முன்பே எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பா மனு சொத்தில் பயிர் செய்தார் என்று வட்டடாட்சியரிடமோ கோட்டாட்சியரிடமோ பதிவு எதுவும் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. அது பற்றி விசாரிக்க வேண்டும். எனது தகப்பனார் எதிர்மனுதாரர் மடத்திலிருந்து குத்தகை பத்திரம் எழுதி வாங்கிய விவரம் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் மடத்திலிருந்து குத்தகைக்கு பெற்ற ஆவணங்கள் எங்களிடம் இருக்கிறது. 1949ஆம் ஆண்டில் எனது தகப்பனார் குத்தகைக்கு எடுத்தபோது இந்து சமய அறநிலையத் துறையிடம் இருந்து அனுமதி எதுவும் பெற்றாரா என்று கேட்டால் நான் அப்போது பிறக்கவே இல்லை. 1974ஆம் ஆண்டில் எனது அப்பா குத்தகையை புதுப்பித்தபோது இந்து சமய அறநிலையத் துறை

ஆணையரிடம் அனுமதி எதுவும் பெற்றாரா என்று எனக்கு தெரியாது. 1974ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டு வரையில் எதிர்மனுதாரர் மடத்தில் மடாதிபதி யாரும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1983ஆம் ஆண்டில் மடாதிபதியாக இருந்த சிதம்பரம் ஜீயர் சுவாமிகளிடம் குத்தகை புதுப்பிக்கப்ட்டதா என்று கேட்டால் எங்களிடம் பணம் வாங்கிக்கொண்டு ரசீது மட்டும் கொடுத்தார்கள். ஆனால் குத்தகையை புதுப்பித்துக் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் கொடுத்த ரசீதுகள் எதையும் நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1992ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டு வரையில் எதிர்மனுதாரர் மடத்தில் மடாதிபதி யாரும் இல்லை என்றால் சரிதான். 1999ஆம் ஆண்டு பட்டத்துக்கு வந்த ஜீயரிடம் பதிவு செய்யப்பட்ட குத்தகை பத்திரம் எதுவும் நாங்கள் எழுதி வாங்கவில்லை. 1974ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு குத்தகைக்கு பணம் செலுத்தி வந்தோம். அதற்கு ரசீதுகள் மட்டும் கொடுத்து வந்தார்கள் என்று சாட்சி பின்னர் தாமாக தெரிவித்தர். எதிர்மனுதாரர் குத்தகை பணத்தை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாக கூறி நான் எனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.

Sd/-J.சந்திரன்,

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.2,

காஞ்சிபுரம்.